மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 27/2015 C/W OS.122/2015 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | சந்திர சேகர் | நாள் | 07.09.2023 |
| தகப்பனார் பெயர் | சண்முகம் | | |

**1 முதல் 3 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.1ன் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-**

56) ச.எண்.356/7A ந்குரிய செக்குபந்தி விவரமானது இட்டேரிக்கும் கிழக்கு, குப்புசாமி நிலத்திற்கும் வடக்கு, கவுண்டர் பாக நிலத்திற்கும் மேற்கு, பெருமாள் பாக நிலத்திற்கு தெற்கு என்றால், சரிதான். இட்டேரிக்கும் கிழக்கு என்பதுதான் தற்போது பஞ்சாயத்து ரோடு என்றால், சரிதான்.

57) தாவா சொத்துக்கள் அனைத்தும் மேச்சேரி கிராமத்தில் தான் உள்ளது என்றால், சரிதான். என் தந்தை எவ்வளவு நாட்கள் உடல்நிலை சரியில்லாமல் இருந்தார் என்றால், இறப்பதற்கு முன்பு 1 மாதமாக உடல்நிலை சரியில்லாமல் இருந்தார். என் தந்தை சுமார் 4, 5 ஆண்டுகளாக நடக்க இயலாமல், படுக்கையில் இருந்தார் என்றால், சரியல்ல.

58) நான் குடியிருந்த கதவு எண்.3/2-23A ல் உள்ள வீட்டிற்கும், மேச்சேரிக்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால், 1 கி.மீ இருக்கும். மேச்சேரிக்கு சுமார் 5 முதல் 10 நிமிடத்தில் சென்று விடலாம் என்றால், சரிதான். மேச்சேரியில் சார்பதிவாளர் அலுவலகம் உள்ளது என்றால், சரிதான். மேற்படி நான் வசித்து வந்த வீட்டிலிருந்து ஓமலூர் செல்வதற்கு சுமார் 3/4 மணி நேரம் ஆகும் என்றால், சரிதான்.

59) மேச்சேரியிலேயே சார் பதிவாளர் அலுவலகம் உள்ள நிலையில், எதனால் ஓமலூர் உயில் ஆவணம் எழுதப்பட்டது என்றால், 1ம் பிரதிவாதி, என் அண்ணன் இறந்த பிறகு 2-வது திருமணம் செய்து கொண்டு மேற்படி 2-வது கணவர் பாலகிருஷ்ணனை எங்கள் வீட்டிலேயே கூட்டி வந்து குடி வைத்திருந்தார். அதனால் என் தந்தைக்கும், 1ம் பிரதிவாதிக்கும் இடையே பிரச்சனை ஏற்பட்டது. மேற்படி பிரச்சனையால் மேச்சேரியில் உயில் பதிவு செய்தால், அங்கும் வந்து 1ம் பிரதிவாதி பிரச்சனை செய்வார் என்று தான் ஓமலூரில் பதிவு செய்யப்பட்டது.

60) அவ்வாறு 1ம் பிரதிவாதிக்கும், என் தந்தைக்கும் இடையே சொத்து சம்பந்தமாக பிரச்சனை இருந்தது என காவல் நிலையத்தில் ஏதேனும் புகார் கொடுக்கப்பட்டுள்ளதா என்றால், இல்லை.

61) என் தந்தைக்கு மேற்படி உயில் எழுதும் போது எவ்வளவு வயதிருக்கும் என்றால், சுமார் 78 வயதிருக்கும். என் தந்தை எழுதிய உயிலில், 1ம் பிரதிவாதிக்கும், தனக்கும் சொத்து சம்பந்தமாக பிரச்சனை உள்ளது குறித்து எதுவும் குறிப்பிடவில்லை என்றால், சரிதான். என் தந்தையை ஓமலூருக்கு உயில் பதிவு செய்ய எவ்வாறு அழைத்து சென்றோம் என்றால், காரில் அழைத்து சென்றோம். நானும் அவருடன் சென்றிருந்தேன்.

62) உயிலில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்து விவரம் மற்றும் சங்கதிகளை, பத்திரம் தயாரித்தவருக்கு யார் சொல்லியது என்றால், என் தந்தையும், அவரது நண்பர் ராஜகோபால் என்பவரும் சொன்னார்கள். உயில் எழுதும் போது என் தந்தை நல்ல மனநிலை மற்றும் உடல்நிலையில் தான் இருந்தார் என மருத்துவ சான்றிதழ் ஏதேனும் பெற்றோமா என்றால், இல்லை.

63) என் தந்தைக்கு உயில் எழுதும் அளவிற்கு தெளிவான மனநிலை மற்றும் உடல் நிலை இல்லாததால் தான் என் தந்தையை காரில் அழைத்து சென்று என் சகோதரியின் கணவரின் செல்வாக்கை பயன்படுத்தி ஓமலூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் உயில் ஏற்படுத்தினோம் என்றால், சரியல்ல. என் சகோதரியின் கணவர் தனராஜ் மேற்படி உயிலில் சாட்சி கையெழுத்து மட்டும் தான் போட்டார். எவ்வித செல்வாக்கையும் பயன்படுத்தவில்லை.

64) மேற்படி உயில் எழுதும் போது நான், என் சகோதரி, என் சகோதரர் ஆகிய அனைவரும் என் தந்தையும் ஓமலூர் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சென்றிருந்தோம் என்றால், சரிதான். மேற்படி உயில் எழுதப்பட்டு சரியாக 11–வது நாள் அதாவது 12.09.2008ம் தேதியில் என் தந்தை இறந்துவிட்டார் என்றால், சரிதான். என் தந்தை இறப்பதற்கு 1 மாதமாக உடல்நிலை சரியில்லாமலும், படிப்படியாக உணவு எடுத்துக்கொள்ளாமலும் இருந்து வந்தார் என்றால், சரிதான்.

65) தாவா சொத்துக்கள் 1ம் பிரதிவாதி மற்றும் அவரது வாரிசுகளுக்கு போக கூடாது என்பதற்காக தான் நல்ல மனநிலையில் இல்லாத உடல் நிலை பாதிக்கப்பட்ட என் தந்தையை நாங்கள் அனைவரும் ஓமலூருக்கு அழைத்து சென்று அவரது விருப்பமில்லாமல் மோசடியாக மேற்படி உயிலை ஏற்படுத்தினோம் என்றால், சரியல்ல.

66) என் தந்தையின் முதல் தாரத்து மகன் கோவிந்தராஜ் என்பவருக்கு ஏற்கனவே பாக பிரிவினை படி பிரிந்த சொத்துக்கள், 1 முதல் 3 வரையிலான பிரதிவாதிகளுக்கு கிடைக்க கூடாது என்பதற்காக தான் என் தந்தையை ஓமலூர் அழைத்து சென்று மோசடியாக ஒரு உயில் ஆவணத்தை ஏற்படுத்தினோம் என்றால், சரியல்ல.

67) 1 முதல் 3 வரையிலான பிரதிவாதிகள் தாவா சொத்தை அபகரிக்கவும், வில்லங்க படுத்தவும் முயற்சி செய்கிறார்கள் என் வழக்குரையில் சொல்லியுள்ள நிலையில், என்ன வில்லங்க படுத்த முயற்சி செய்தார்கள் என்றால், பிரதிவாதிகள் தாவா சொத்தில் நுழைந்து இடையூறு செய்தார்கள். சொத்தை விற்க முயற்சிக்கவில்லை.

68) ச.எண்.356/7A ன் சுவாதீனத்தில் பிரதிவாதிகள் தான் சுவாதீனத்தில் இருந்தார்கள் என்றாலும், அதனால் அவர்கள் தாவா சொத்தை வில்லங்க படுத்த வேண்டிய அவசியமில்லை என்றாலும், நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும், சரியல்ல.

69) ச.எண்.356/7A4, ச.எண்.356/7A8 மற்றும் ச.எண்.356/5C ஆகிய நிலங்கள் என் தந்தை இறந்ததற்கு பிறகு, என்னுடைய அனுபவத்தில் தான் உள்ளது என்றாலும், மேற்படி நிலத்தை பொறுத்து 1 முதல் 3 வரையிலான பிரதிவாதிகள் எவ்வித உரிமையும் கோரவில்லை என்றாலும், எவ்வித இடையூறும் செய்யவில்லை என்றாலும், சரிதான்.

70) ச.எண்.356/7A2 ல் இவ்வழக்கு தாக்கல் செய்த சமயத்தில் நான் சுவாதீனத்தில் இருந்தேனா என்றால், இல்லை. அவ்வாறு உள்ள நிலையில் என் வழக்குரையில் அனைத்து சொத்தையும் நான்தான் அனுபவித்து வருகிறேன் என சொல்லியுள்ளது தவறானது என்றால், சரிதான்.

71) ச.எண்.356/7A2 ல் உள்ள சொத்திற்கு வீட்டுவரி, கந்தாயம், மின் கட்டணம் ஆகியவை பிரதிவாதிகள் தான் செலுத்தி வருகிறார்கள் என்றால், வீட்டுவரி மற்றும்

மின் கட்டணம் ஆகியவை பிரதிவாதிகள் தான் செலுத்தி வருகிறார்கள். ஆனால், கந்தாயம் நான்தான் கட்டி வருகிறேன். மேற்படி கந்தாயம் நான் செலுத்தி வந்ததற்கான ஆவணங்கள் எதையேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்வது தவறானது என்றாலும், இதுவரை நான் ஒரே ஒரு வரி ரசீதை மட்டும் தான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், சரியல்ல.

72) என் வழக்குரை சொத்து விவரத்திலும், முதல் விசாரணை சாட்சியத்திலும் வீட்டின் கதவு எண் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால், சரிதான். என் முதல் விசாரணை சாட்சியத்தில் என் தந்தை இறந்த பிறகு, பிரதிவாதிகள் தாவா சொத்தில் தங்களுக்கு பாகம் இருப்பதாக கூறி வந்தனர் என சொல்லியுள்ள நிலையில் எந்த தேதியில் பிரதிவாதிகள் என்னிடம் அவ்வாறு கூறினார்கள் என்றால், தேதி சரியாக நினைவில்லை. அவ்வாறு பிரதிவாதிகள் பாகம் கேட்டு தொந்தரவு செய்தார்கள் என புகார் எதுவும் நான் அளிக்கவில்லை என்றால், சரிதான்.

73) உயில் படி வாதிகள் தான் உரிமையாளர்கள் என கூறி வருவாய் ஆவணங்களில் ஏதேனும் பெயர் மாற்றம் செய்தோமா என்றால், இல்லை. பிரதிவாதிகள் அடிக்கடி தொந்தரவு செய்ததாக நான் சொல்லியுள்ள நிலையில் எந்த தேதியில் தொந்தரவு செய்தார்கள் என குறிப்பாக சொல்ல இயலுமா என்றால், 2015 ம் வருடம் ஜனவரி மாதம் 10 ம் தேதியில் தொந்தரவு செய்தார்கள். தாவா தாக்கல் செய்ததற்கு பின்னிட்டும் 2017 ம் வருடத்தில் தாவா சொத்திலுள்ள மரத்தை வெட்டி பிரச்சனை செய்தார்கள்.

74) 2015 ம் வருடம் ஜனவரி மாதம் 10 ம் தேதியில் பிரதிவாதிகள், வாதிகளை தொந்தரவு செய்ததாக நான் சொல்வது வழக்கு மூலத்திற்காக கற்பனையாக சொல்லும் சங்கதி என்றால், சரியல்ல. 2017 ம் வருடத்தில் தாவா சொத்திலுள்ள மரத்தை வெட்டி பிரச்சனை செய்ததாக சொல்லும் நிலையில், அது தொடர்பாக நாங்கள் புகார் அளித்தோமா என்றால், இல்லை. ஆனால் என் தாயார் காவல்நிலையத்தில் கூறியதன் பேரில் போலீசார் பிரதிவாதிகளை அழைத்து கண்டித்து அனுப்பினர். புகாரே நான் அளிக்கவில்லை என்று சொல்லும் நிலையில், காவலர்கள், பிரதிவாதிகளை அழைத்து கண்டித்தனர் என சொல்வது பொய்யானது என்றால், சரியல்ல.

75) வழக்கு நிலுவையில் இருக்கும்போது பிரதிவாதிகள் தாவா சொத்திலுள்ள மரத்தை வெட்டி விட்டனர் என கூறி நீதிமன்றத்திற்கு தெரிவித்து குறிப்பாணை எதுவும் நாங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். மேற்படி சங்கதிகளை நான் என் முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றால், சரிதான்.

76) ச.எண்.356/7A2 மற்றும் ச.எண்.356/7A4 ஆகிய நிலங்களில் பிரதிவாதிகள் தான் சுவாதீனத்தில் உள்ள நிலையில் மேற்படி மரங்களை அவர்கள் வெட்ட வேண்டிய அவசியம் இல்லை என்றால், சரியல்ல. ச.எண்.356/7A10, ச.எண்.356/7A8 மற்றும் ச.எண்.356/5C ஆகிய நிலங்கள் அமரம் செல்லும் தார்சாலைக்கு மேற்கை ஒட்டினாற்போல் அமைந்துள்ளது என்றால், ச.எண்.356/7A10 மற்றும் ச.எண்.356/5C ஆகிய நிலங்கள் மட்டும் தான் அமைந்துள்ளது.

77) நான் ச.எண்.356/7A8 ல் உள்ள வீட்டிற்கு செல்வதற்கு மேற்படி அமரம் செல்லும் தார் ரோட்டிலிருந்து தான் செல்ல வேண்டும் என்றால், சரிதான். மேச்சேரி வழியிலும் செல்லலாம். ச.எண்.356/7A2 ஆனது பஞ்சாயத்து ரோட்டை ஒட்டி கிழக்கில் அமைந்துள்ளது என்றால், சரிதான்.

78) ச.எண்.356/7A2 ல் பிரதிவாதிகளின் கார் செட் ஒன்றும், போர்வெல் ஒன்றும் உள்ளது என்றால், சரிதான். மேற்படி போர்வெல்லை பிரதிவாதிகள் தான் அமைத்தனர் என்றால், சரிதான். ச.எண்.356/7A4 ல் உள்ள வீட்டிற்கு பிரதிவாதிகள் மேற்படி பஞ்சாயத்து ரோட்டின் வழியாகத்தான் சென்று வருகிறார்கள் என்றால், சரிதான்.

79) ச.எண்.356/7A10, ச.எண்.356/7A8, ச.எண்.356/5C ஆகிய நிலங்கள் தற்போது நான்தான் விவசாயம் செய்து வருகிறேனா என்றால், தற்போது என் தாயார் தான் விவசாயம் செய்து வருகிறார். இவ்வழக்கு தாக்கல் செய்த சமயத்தில், ச.எண்.356/7A2 –ல் உள்ள நிலத்தில் பிரதிவாதிகள் தான் விவசாயம் செய்து அனுபவித்து வருகிறார்கள் என்றால், சரிதான்.

80) பிரதிவாதிகள் தான் ச.எண்.356/7A2 மற்றும் ச.எண்.356/7A4 ஆகியவற்றில் உள்ள சொத்துக்களை அனுபவித்து வருகிறார்கள் என என் வழக்குரையில் நான் சொல்லவில்லை என்றால், சரிதான். தாவா சொத்து பூர்வீக சொத்து என்பதை

மறைத்தும், மேற்படி சொத்துக்களை வாதிகள் மட்டுமே அனுபவிக்க வேண்டும் என்ற எண்ணத்திலும், மோசடியாக ஒரு உயில் ஆவணத்தை ஏற்படுத்தி அதன் அடிப்படையில் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால், சரியல்ல.

81) என் தந்தை உண்மையில் சுயவிருப்பத்துடன் மேற்படி உயிலை ஏற்படுத்தியிருந்தால் என் தந்தை இறந்தவுடனே மேற்படி உயில் உள்ளது குறித்து நாங்கள் வெளிப்படுத்தி சொத்தை எங்கள் பெயருக்கு மாற்ற நடவடிக்கை எடுத்திருப்போம் என்றாலும், மேற்படி உயில் மோசடியானது என்பதால்தான் 2015ம் வருடம் வரை அதுகுறித்து எதுவும் தெரிவிக்காமல் இருந்து விட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால், சரியல்ல.

82) மேற்படி உயில் மோசடியானது என்பதால் தான் அதில் கதவு எண் குறித்து சொல்லாமலும், பிதுராஜித சொத்தை தனிப்பட்ட சொத்து எனவும், தெரிவித்து மேற்படி உயிலை ஓமலூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்துள்ளோம் என்றால், சரியல்ல.

83) உயிலில் உள்ள வாசகங்கள் தவறானது என்றாலும், அதனால் தான் மேற்படி உயிலை செல்லாது என அறிவிக்க கோரி இந்த பிரதிவாதிகள் அ.வ.எண்.122/2015 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளனர் என்றாலும், சரியல்ல. உண்மையில் என் தந்தை உயில் எழுதியிருந்தால், நாங்கள் மேற்படி உயிலை நிரூபிக்க வழக்கு தாக்கல் செய்து உத்தரவு பெற்றிருப்போம் என்றாலும், மேற்படி உயில் மோசடியானது என்பதால்தான் அவ்வாறு எவ்வித வழக்கும் நாங்கள் தாக்கல் செய்யவில்லை என்றாலும், சரியல்ல.

84) நான் அ.வ.எண்.27/2015 என்ற வழக்கை தாக்கல் செய்து பிரதிவாதிகளுக்கு தொல்லை கொடுத்ததால் தான் அ.வ.எண்.122/2015 என்ற வழக்கை தாக்கல் செய்து விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரியுள்ளனர் என்றால், சரியல்ல.

85) 2ம் வாதி பெரிய கவுண்டர், என் மற்றொரு சகோதரர் கோவிந்தராஜ் இறந்ததிலிருந்து மனநிலை பாதிக்கப்பட்டு தன் இறுதி காலம் வரை அதே

நிலையில்தான் இருந்தார் என்றால், சரிதான். அவ்வாறு உள்ள நிலையில் வா.சா.ஆ.1 உயிலில் மேற்படி பெரிய கவுண்டர் மனநிலை சரியில்லாதவர் என்றோ, அவர் சார்பாக கார்டியன் யாரேனும் நியமிக்கப்படுவதாகவோ எந்த குறிப்பும் இல்லை என்றால், சரிதான்.

86) தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 உயிலில் பெரியண்ணன் என்ற வார்த்தை அழித்து திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றாலும், அதன் அருகில் சுருக்கொப்பம் எதுவும் செய்யப்படவில்லை என்றாலும், சரிதான். அவ்வாறு வார்த்தை அழிக்கப்பட்டு திருத்தம் செய்யபட்டது குறித்து மேற்படி உயிலில் எவ்வித வாசகங்களும் சொல்லப்படவில்லை என்றால், சரிதான்.

87) 2ம் வாதி பெரிய கவுண்டர், மனநிலை சரியில்லாதவர் என்ற தகவலை சார்பதிவாளர் அலுவலகத்தில் தெரிவிக்காமலேயே மேற்படி உயில் மோசடியாக ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால், சரியல்ல. மேற்படி உயில் ஆவணம் மோசடியாக ஏற்படுத்தப்பட்டுள்ளது என்பதால் 1 முதல் 3 வரையிலான பிரதிவாதிகளை எவ்விதத்திலும் அது கட்டுப்படுத்தாது என்றால், சரியல்ல.

88) வாதிகள் தூய்மையான காரணங்களுடன் நீதிமன்றத்தை அணுகவில்லை என்றாலும், உண்மையான சங்கதிகளை மறைத்து, மோசடியான உயில் ஆவணத்தை வைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதால் அ.வ.எண்.27/2015 என்ற வழக்கு தள்ளுபடி செய்ய அருகதையுடையது என்றாலும், பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள அ.வ.எண்.122/2015 என்ற வழக்கு அனுமதிக்க தக்கது என்றாலும், சரியல்ல.

ஒம்/−திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.